1992 ஏப்ரல் 23]

இயங்கிக் கொண்டிருக்கிறது. நிதி நிலை நெருக்கடி ஒரு புறத்தில், பஞ்சினுடைய விலை உயர்ந்தது ஒரு புறத்தில் இத் தகைய சூழ்நிலையில் இருக்கிற நூற்பாலைகள் நடத்துவதே மிக மிக கஷ்டமாக இருக்கிறது. இதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தாய் உள்ளத்தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு கோணங்களில் இதற்காக நிதி உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தற்போது அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 599, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை. இருக்கையில் இல்லை.

வினா எண் 600 திரு. மு. நடேசன், திரு. கே. கந்தசாமி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

600—

சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

*1355. திரு. மு. நடேசன்,
திரு. கே. கந்தசாமி.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் நகராட்சிக்குச் சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரியில் கழிவுநீர் சுத்திகரிப்பு பண்ணையை அமைக்க உயர் நீதிமன்றம் இடைக்கால உத்திரவு அளித்துள்ளதால் மாற்று ஏற்பாடாக கான்பூரில் புதிதாக செயல்படுத்தப்பட்டுள்ள. (Unacrobic Sludde Blanket) முறையில் சேலம் கழிவுநீர் திட்டத்தில் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 வருடங்களாக சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் இதோ முடிந்துவிட்டது, அதோ முடிந்து விட்டது என்ற நிலைமையிலே இன்றைய சேலம் நகரத்திலே ஏறக்குறைய 6 லட்சம் மக்கள் வாழ்கிற நிலைமை இருக்கிறது. மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற ஒரு நகரமாக